### வேடசந்தூர் – வடமதுரை சாலையை நான்கு வழிச்சாலை ஆக்குவீர்! திருமுக்கூடலூரிலிருந்து நீரேற்றுத் திட்டம் மூலம்

# திண்டுக்கல் மாவட்டக் குளங்களில் நீர் நிரப்பி நீர்மட்டம் உயர்த்துக!

## சட்டப்பேரவையில் – வேடசந்தூர் தொகுதி எம்.எல்.ஏ. த.சாமிநாதன் கோரிக்கை!

**சென்னை, ஆக.19-**

**சட்டப்பேரவையில் வேடசந்தூர் தொகுதி கழக உறுப்பினர் த.சாமிநாதன், வேடசந்தூரிலிருந்து வட மதுரை வரை இருவழிச் சாலைகளை நான்கு வழிச் சாலையாக மாற்றுவீர் என்றும் திருமுக்கூடலூரிலிருந்து நீரேற்றுத் திட்டம் மூலம் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான குளங்களை நிரப்பி நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும் என்றும் பல்வேறு கோரிக்கைகளை வைத்து ஆற்றிய உரை வருமாறு:-**

பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதி, சமத்துவம், பெண் கல்வி, பெண் உரிமை என்று இந்தத் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு தன் வாழ்நாள் முழுவதும் போராடிய தந்தை பெரியார், தந்தை பெரியாரின் எண்ணங்களையெல்லாம் சட்டமாக்கி, தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ தன் ஆட்சியைப் பயன்படுத்திய பேறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன்.

தன்னுடைய 80 ஆண்டுகால பொது வாழ்வில் 20 ஆண்டுகாலம் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்து, எண்ணற்ற திட்டங்களைத் தமிழ்நாட்டிற்கு வழங்கி, தமிழிலிருந்து கணினி வரை அனைத்துத் திட்டங்களையும் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து, தமிழ்நாட்டை ஒரு முன்னணி மாநிலமாக மாற்றியமைத்த எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**முதல்வருக்கெல்லாம் முதல்வர் எங்கள் தலைவர்!**

இந்தச் சட்டமன்றத் தேர்தலில் எனக்கு போட்டியிட வாய்ப்பளித்து, என் வெற்றிக்காக வந்து பிரச்சாரம் செய்த எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முன்னாள் முதலமைச்சர், தன்னுடைய திட்டங்களால் தமிழக மக்களின் இதய சிம்மாசனத்தில் நீங்கா இடம் பிடித்திருக்கின்ற எங்கள் தலைவர் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக தன்னுடைய ஆட்சிக்காலத்தை மாற்றிக் காட்டியவர் (மேசையைத் தட்டும் ஒலி) உதாரண புருஷராக இருந்த எங்கள் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், எங்களுடைய இளந்தலைவர் ஒற்றைச் செங்கல்லால் ஓர் ஆட்சியை மாற்றிய மகான் வெற்றி வீரர், எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு உறுதுணையாக எனக்கு இருந்த முன்னாள் அமைச்சரும், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளருமான அண்ணன் இ.பெரியசாமி அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் முன்னாள் அமைச்சர் அண்ணன் கே.என்.நேரு அவர்களுக்கும், எதிர்க்கட்சி கொறடா அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கும், முன்னாள் அமைச்சர் அண்ணன் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்கு உறுதுணையாக இருந்த மாவட்டக் கழகத்தின் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான அர.சக்கரபாணி அவர்களுக்கும், எங்களுடைய மாவட்டக் கழகத்தின் செயலாளர் திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில் குமார் அவர்களுக்கும், என்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியடையச் செய்த பெருமைமிகு வேடசந்தூர் வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்குப் பாடுபட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகளுக்கும், பாகநிலை முகவர்களுக்கும், பாகநிலை உறுப்பினர்களுக்கும், எனது தொகுதியில் இருக்கின்ற இளைஞர்களுக்கும் குறிப்பாக Kabaddi, Cricket, Volleyball போன்ற விளையாட்டு வீரர்களுக்கும், சமூக அமைப்புகளுக்கும், எங்களது சொந்தங்களுக்கும், நான் இந்த மாமன்றத்தில் நின்று கொண்டிருப்பதற்கு காரணமாக இருக்கின்ற எனது தந்தை பி. தங்கராஜ் அவர்களுக்கும், என்னுடைய தாயார் சரஸ்வதியம்மாள் அவர்களுக்கும், எனக்கு கல்வி கொடுத்த என்னுடைய மாமா எஸ்.ஆர். பொன்னுசாமி, கே.எஸ். சகாதேவன் உள்ளிட்ட அனைவருக்கும், நண்பர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், ஊடவியலாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத் துறை ஆகியவற்றின் மீதான மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு முன்பாக என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட ஓர் இதயப் பிரச்சினையைப் பேசி மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு உங்களிடம் அனுமதி கேட்கிறேன்.

வறட்சியான வேடசந்தூர் தொகுதியை வளமான வேடசந்தூர் தொகுதியாக மாற்றுவதற்கு, காவிரி-–அமராவதி ஆறுகள் இணைகின்ற திருமுக்கூடலூரிலிருந்து நீரேற்று திட்டத்தின் மூலமாக நீரைக் கொண்டுவந்து, கரூர் மாவட்டத்தில் இருக்கின்ற கரூர், -அரவக்குறிச்சி, -கிருஷ்ணராயபுரம், திண்டுக்கல் மாவட்டத்தில் இருக்கின்ற வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், ஆத்தூர், திண்டுக்கல், -நத்தம் ஆகிய 8 சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற ஆயிரக்கணக்கான குளங்களில் நீரை நிரப்புவதற்கு ஊராட்சித் துறைக்கும், நீர்வளத் துறைக்கும் சொந்தமான குளங்களில் நீரை நிரப்பி, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தி, விவசாயிகளின் வாழ்வாதாரம் பெருகுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய அறிக்கையை தயாரிப்பதற்காக ரூ.97 இலட்சம் கடந்த திராவிட மாடல் ஆட்சியில் ஒதுக்கி, அந்தத் திட்டம் சாத்தியம் என 20-.8-.2025 அன்று அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

5,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அத்திக்கடவு- - அவினாசி திட்டத்தைப் போன்று இந்தத் திட்டத்தை நிறைவேற்ற, இரண்டு கட்டங்களாகஇந்தத்திட்டம்அறிவிக்கப்பட்டிருக்கிறது. 1,750 கோடி ரூபாயில் முதற்கட்டமாகவும், 3,750 கோடி ரூபாயில் இரண்டாவது கட்டமாகவும் நிறைவேற்ற இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், அத்திக்கடவு-அவினாசி திட்டத்தில் எப்படி விவசாயிகள் பலனடைந்து அந்தப் பகுதிகளெல்லாம் வளமான பகுதிகளாக மாறியதோ, அதேபோல், இந்த உபரி நீரைக் கொண்டு வந்து எங்கள் ஊரிலிருக்கின்ற குளங்களையெல்லாம் நிரப்பும்போது, இரண்டு மாவட்டங்களில் இருக்கிற 30 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைவார்கள்; விவசாயம் பெருகும்; இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள். தற்போது எங்கள் ஊரிலிருந்து வேலைவாய்ப்பு தேடி, வெளி மாவட்டங்களைத் தாண்டி, வெளி மாநிலங்களுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையெல்லாம் மாறி, உள்ளூரில் வேலைவாய்ப்பு பெறுவதற்கும், எங்கள் ஊரை வளமான பகுதியாக மாற்றுவதற்கும், இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**தனியார் பெயரில் பட்டா**

வேடசந்தூர் தொகுதி மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற ஒரு பிரச்சினை. ஒரு ஊர் இருக்கிறது; அந்த ஊருக்கு செல்கின்ற வழி என்பது காலங்காலமாக மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், அந்த வழிக்கு தனியார் பெயரில் பட்டா இருக்கிறது. மக்கள்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் தனியார் பெயரில் பட்டா இருக்கின்ற காரணத்தினால் அந்த இடத்திற்கு அரசு வளர்ச்சித் திட்டங்களை, அதாவது சாலை போன்ற வளர்ச்சித் திட்டங்களை செய்ய முடியவில்லை. எங்களுடைய வேடசந்தூர் தொகுதியில், கோவிலூர் பஞ்சாயத்தில், குறிக்கோடாங்கிபட்டி பிரிவு முதல் நவக்குளம் வரை செல்லுகின்ற சாலை; உதாரணமாக சொல்கிறேன், எங்கள் தொகுதியிலே புத்தூர் பஞ்சாயத்தில் இன்னும் பல ஊர்கள் இருக்கின்றன. எல்லா இடங்களிலும் இதுபோன்ற பிரச்சினை இருக்கும். இதை நிலம் கையகப்படுத்தும் திட்டத்தின் மூலமாகவோ அல்லது பேச்சுவார்த்தையின் மூலமாகவோ நிலத்தைக் கையகப்படுத்தி, அரசு வளர்ச்சித் திட்டங்களைச் செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், எங்களுடைய தலைவர், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், ‘மாவட்டத்திற்கு ஒரு மருத்துவமனை’ என்கிற கொள்கை முடிவை எடுத்தார்கள் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது 11 மருத்துவக் கல்லூரிகள் கொண்டுவந்திருந்தாலும், எங்களுடைய 2021-2026 ஆம் ஆண்டுகளில் திராவிட நாயகரின் ஆட்சியில்தான் அனைத்து மருத்துவக் கல்லூரிகளுக்கும் கட்டடங்கள் கட்டப்பட்டு, அனைத்து உபகரணங்களும் வழங்கப்பட்டது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனை, அரசு மருத்துவமனையாக மாறிய காரணத்தினால், பழனி மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக மாற்றி, 100 கோடி ரூபாய் அதற்காக செலவு செய்து, அந்த மருத்துவமனையில் அனைத்து வசதி, வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்த அரசு, எங்கள் திராவிட நாயகரின் அரசு, எங்கள் முன்னாள் முதலமைச்சர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் என்பதை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

என்னுடைய வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதியில் ரூபாய் 5 கோடிக்கு கட்டடங்கள் கட்டி, அதனை முன்னாள் துணை முதலமைச்சர் அவர்கள் வந்து திறந்து வைத்தார்கள். தற்போது 56 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனைக்கு உள்நோயாளிகள் பிரிவிற்கு கட்டடங்கள் கட்டி, நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே, கட்டடங்கள் கட்டிக் கொடுத்து, CT scan machine உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலிருக்கின்ற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களையும், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றி, மருத்துவ உபகரணங்கள் அமைத்து கொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**பட்டா வழங்கியதில் மாபெரும் சாதனை!**

வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது எனக்கு பேச வாய்ப்பளித்த உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உலகத்தில் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்பதுதான் மனிதக் குலத்தின் அடிப்படை தேவை. அந்தவகையில், கடந்த காலங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் எப்பொழுதெல்லாம் ஆட்சியில் இருந்ததோ, அப்போதெல்லாம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை முடிந்தளவிற்கு வழங்கியிருக்கிறோம். 2021-2026-ஆம் ஆண்டுகளில் திராவிட நாயகரின் ஆட்சியில் 23 இலட்சத்து 56 ஆயிரத்து 653 பட்டாக்களை வழங்கி, மாபெரும் சாதனையைச் செய்த அரசு, முன்னாள் முதலமைச்சர், அண்ணன் தளபதி அவர்களுடைய அரசு என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், சென்னையில் பல்வேறு இடர்பாடுகளைத் தாண்டி 1 இலட்சத்து 42 ஆயிரத்து 588 பட்டாக்களை வழங்கியிருக்கிறார்கள். மாநகராட்சி என்றால் 16 கி.மீ. தாண்டியும், நகராட்சி என்றால் 8 கி.மீ. தாண்டியும் பட்டா வழங்குகின்ற பணியை இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளுமா? 38 மாவட்டங்கள், 317 வட்டங்களில் எவ்வளவு மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன? அனைவருக்கும் பட்டா வழங்குகிற திட்டம், road map இந்த அரசிடம் உள்ளதா என்பதை பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, கிராமங்களில் குறிப்பாகப் பட்டியலின மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் ஒரு குடும்பம் இருக்கிறது. ஒரு குடும்பத் தலைவர், அவருக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் பிறக்கின்றன. அந்த இரண்டு குழந்தைகளுக்கும் வயது வந்தவுடன், அவர்களும் திருமணம் செய்து கொண்டு, மொத்தம் மூன்று குடும்பங்களும் ஒரே அறையில் வசிக்கின்ற நிலைமை கிராமங்களில் இருக்கிறது. நாங்கள் கிராமங்களுக்குச் செல்லும் போதெல்லாம், பட்டா கோரி மனுக்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற இந்தப் பிரச்சினைக்கு பட்டியலின மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் பட்டா கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



எங்களுடைய ஆட்சிக் காலத்தில் அரசாணை எண் 97 மற்றும் 205-இன்படி முடிந்தளவிற்கு பட்டாக்களை வழங்கியிருக்கிறோம். மந்தை புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு ஆகியவற்றை கொடுக்கக்கூடாது என்று உயர் நீதிமன்ற ஆணை இருக்கிறது. ஆனால், அரசுக்கு மற்ற பயன்பாடுகளுக்காக தொழிற்சாலைகளுக்காகவோ தொழிற்பேட்டைகளுக்காகவோ நிலம் தேவைப்படும் போது அதை எடுப்பதற்கு வேறுவொரு இடத்தில் அதற்கு ஈடான நிலத்தைக் கொடுத்துவிட்டு, எடுக்கின்ற வழிமுறை என்பது இருக்கின்றது. ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கவும், அவர்களுக்கு வீடு கட்டி கொடுக்கவும் இதேபோன்ற வழியை பயன்படுத்தி உயர் நீதிமன்ற ஆணையை பெற்று, எங்கெல்லாம் வாய்ப்புகள் இருக்கிறதோ அங்கெல்லாம் மந்தை புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு இடங்களிலெல்லாம் பட்டாக்கள் வழங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம்!**

சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் என்பது மற்ற திட்டங்களைப் போன்றது அல்ல. முதியோர்களாகவும், மாற்றுத்திறனாளிகளாகவும், கைம்பெண்களாகவும் இருப்பவர்களினுடைய மரியாதையாகத்தான் பார்க்க வேண்டுமே தவிர, கருணை என்ற அடிப்படையில் இதை பார்க்கக் கூடாது. அவர்கள் கண்ணியத்துடன் வாழவும், மரியாதையுடன் வாழவும் இந்த சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் என்பது மிக முக்கியமானத் திட்டம் என்று நம்முடைய புகழ்பெற்ற பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் அவர்கள் கூறியிருக்கிறார்கள். சமூக பாதுகாப்புத் திட்டத்தை விரிவாக்குவது என்பது சமூக நீதியின் அங்கம் என்பதை அறிஞர் Jean Dreze அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். காலத்திற்கேற்ப இந்த நிதியை உயர்த்த வேண்டுமே தவிர, ஒரு காலமும் இந்த நிதியை குறைக்கக் கூடாது. 2021ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது, 4,306.76 கோடியாக இருந்த சமூக பாதுகாப்புத் திட்ட நிதி என்பது 2026 ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சியிலிருந்து வெளியே செல்லும் போது 5,463 கோடியாக, ஆண்டொன்றிற்கு கிட்டத்தட்ட 240 கோடி அளவிற்கு உயர்த்தி வழங்கியிருக்கிறோம். இப்பொழுது நீங்கள் உங்கள் ஆட்சியில் 5,462 கோடி என்று ஒரு கோடி குறைத்து குறிப்பிட்டிருக்கிறீர்கள். முதலமைச்சர் அவர்களின் பாணியில் சொல்வதென்றால், தாய்மார்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் 3,000 ரூபாய் நிதி கொடுக்கிறோம் என்று தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் இருக்கிறது. 3,000 ரூபாய் மாற்றுத்திறனாளி உதவித் தொகை, முதியோர் உதவித்தொகை, கைம்பெண் உதவித்தொகை ஆகியவற்றையெல்லாம் கொடுக்கப்போகிறீர்களா? அல்லது இது தேர்தல் வாக்குறுதியோடு நின்றுவிடுமா? அல்லது ஏற்கெனவே இருக்கின்ற பயனாளிகளின் எண்ணிக்கையை குறைக்கப் போகிறீர்களா? என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**கழக ஆட்சி வழங்கிய பேரிடர் நிவாரணம்!**

பேரிடர் மேலாண்மை நிதியும் ரூ.11,532 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய ஆட்சிக் காலத்தில் பல்வேறு புயல்கள் வந்தன. மிக்ஜாம் புயல், பெஞ்சால் புயல், டிட்வா புயல் எனப் பல்வேறு புயல்கள் வந்த போதும் எங்களுடைய தலைவர் முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 30 இலட்சம் குடும்பங்களுக்கு 6,000 ரூபாயும், குறைவாகப் பாதிக்கப்பட்ட 15 இலட்சம் குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாயும் வழங்கினார்கள். பயிர் சேதத்திற்கு 1,557.59 கோடியும், தோட்டக்கலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.290.929 கோடியும், தடுப்புச் சுவர்கள் அமைப்பதற்கு ரூ.1,375.59 கோடியும் வழங்கினார்கள். இந்த அரசு ஏற்கெனவே வறட்சிக்கு நிவாரணம் வழங்கவில்லை. இனிமேலாவது வறட்சிக்கு நிவாரணம் வழங்குமா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) ஒரேயொரு point.

அதேபோல திராவிட மாடல் ஆட்சியில் பத்திரப் பதிவில் STAR 3.0 என்ற திட்டத்தை எங்களுடைய தலைவர் அவர்கள் ஜனவரி மாதம் 23 ஆம் தேதி 2025-ஆம் ஆண்டிலேயே கொண்டு வந்துவிட்டார்கள். அதில் காகிதமில்லாமல், நேரில் வராமலேயே பத்திரப் பதிவு செய்ய முடியும். அடுக்குமாடி குடியிருப்புகளில் மறு பத்திரப் பதிவு செய்தால், கள ஆய்வு இல்லாமலேயே ஆவணங்களைத் திருப்பித் தர முடியும். இதுமட்டுமின்றி, வில்லங்கச் சான்று உள்ளிட்ட 18 சேவைகளை வழங்க முடியும் என்று ஜனவரி மாதம் 23 ஆம் தேதி கொண்டுவந்த திட்டத்திற்கு,

10-5-2026-இல் ஆட்சிக்கு வந்த இந்த அரசு தாங்கள் கொண்டுவந்ததாக விளம்பரப்படுத்துவது தவறு. இது தவிர்க்கப்பட வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பினை வழங்கிய உங்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்!**

வேடசந்தூர் தொகுதி அரசு மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன், எம்.ஆர்.ஐ ஸ்கேன் அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், ஆர்.புதுக்கோட்டை ஊராட்சி, காளகவுண்டன்பட்டியில் உள்ள துணை சுகாதார நிலையத்தை மேம்படுத்தித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், குளத்தூர் ஊராட்சியில், அரசு துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்தித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, அய்யலூர் ஆரம்ப சுகாதார மருத்துவமனையை மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையாக தரமுயர்த்தித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர்-வடமதுரை வரை உள்ள இருவழிச் சாலைகளை நான்கு வழிச்சாலையாக மாற்றித் தர வேண்டும். வடமதுரை நான்கு வழிச்சாலையில் கால்வாய் அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, எரியோடு பேரூராட்சி, 3-வது வார்டு, குண்டாம்பட்டி மேல்நிலைத்தொட்டி-பழைய மோட்டார் ரூம் வரை தார்ச் சாலைகளை மேம்படுத்த வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, எரியோடு பேரூராட்சி, 11-வது வார்டு, திண்டுக்கல்-கரூர் சாலை எரியோடு பேருந்து நிறுத்தம்- கொடிக்கால்பட்டி பிரிவு, 2-வது வார்டு, மறவபட்டி அடமந்தை அங்கன்வாடி-இரயில்வே கிராசிங், 15-வது வார்டு, குருக்களையன்பட்டி திண்டுக்கல் கரூர் சாலை-மோட்டார் ரூம், 8-வது வார்டு, மணியகாரன்பட்டி-மத்தனம் பட்டி, அய்யலூர் பேரூராட்சி, மொடக்குபட்டி-தங்கமாபட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, வட மதுரை பேரூராட்சி, 7-வது வார்டு, தும்மலக்குண்டு-சக்கரவர்த்தி நகர் ஆகிய தார்ச் சாலைகளை மேம்படுத்த வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, எரியோடு பேரூராட்சி, 15-வது வார்டு, இராமசாமி நகர், வட மதுரை பேரூராட்சி, 3-வது வார்டு, மேட்டுப் பட்டி, 12-வது வார்டு, செங்குளத்துப்பட்டி ஆகிய இடங்களில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வடமதுரை பேரூராட்சி, 1-வது வார்டு, ஆதம்ஸ் நகரில் தார் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வடமதுரை பேரூராட்சி, 11-வது வார்டு, ஊராட்சி ஒன்றிய அலுவலகம்-இ.பி.காலணி மெயின்ரோடு, 2-வது வார்டு, குப்பைகிடங்கு-வடமதுரை மெயின் ரோடு வரை உள்ள தார் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டும்.

**புதிய பேருந்து நிலையம்!**

வேடசந்தூர் தொகுதி, வடமதுரை பேரூராட்சியில், புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, அய்யலூர் பேரூராட்சி, அய்யலூர் இரயில்வே கேட்-களர் பட்டி, பாலத்தோட்டம்-கிணத்துப்பட்டி, சந்தை பேட்டை நேதாஜி நகர், கோம்பை-தெற்கு முடக்கு வரை உள்ள தார்ச் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, அய்யலூர் பேரூராட்சி, 7-வது வார்டு, சந்தைப்பேட்டையில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலைத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி, அய்யலூர் பேரூராட்சி, 11-வது வார்டு, கஸ்பா அய்யலூர், 1-வது வார்டு, S.K. நகர் ஆகிய இடங்களில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், இராமநாதபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி-பெருமாள்கோயில்பட்டி வரை உள்ள தார் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், நத்தப்பட்டி ஊராட்சியில், சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், கோவிலூர் ஊராட்சி தங்கச்சியம்மாபட்டி-கருதனம்பட்டி, மாரம்பாடி ஊராட்சி, கோட்டைமந்தை-பெருமாள்கோயில்பட்டி, வடமதுரை ஒன்றியம், பிலாத்து ஊராட்சி, கம்பிளியம்பட்டி- பெத்தப்பட்டி, நாகம்பட்டி ஊராட்சி, சேனன்கோட்டை-பெருமாள்கவுண்டன்பட்டி வரை தார்ச் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டும்.

வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, மாரம்பாடி ஊராட்சி, கோட்டைமத்தை- சின்னழகன்பட்டி, பாலப்பட்டி ஊராட்சி, நரசிங்கபுரம் தார்ச் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், எஸ்.ஏ சாலை-வடுகம்பாடி, இராமநாதபுரம் காசிபாளையம் சாலை-காளகவுண்டன்பட்டி, திருக்கூர்ணம் சாலை- பன்னைப்பட்டி, கணக்கபிள்ளையூர்-சுக்காநத்தம் வரை தார் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், உல்லியகோட்டை சாலை- சி. அம்மாபட்டி, சேர்வைகாரன்பட்டி-வடகம் பாடி, சேர்வைகாரன்பட்டி தலும்பாகவுண்டனூர்- மாங்களகவுண்டனூர் வரை தார் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டும். பாளையம் பேரூராட்சி, எல்லை-கோமுட்டி பட்டி, ஆர்.கோம்பை ஊராட்சி, புதூர் பிரிவு- அரசன்பூசாரிகளம், வாணிக்கரை ஊராட்சி, செங்குளத்துப்பட்டி இராமநாயக்கனூர், வடுகம்பாடி, சாலை-மால்நாயக்கனூர் வரை தார்ச் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், கோட்டாநத்தம் ஊராட்சி, சேர்வைகாரன்பட்டி-மங்காகவுண்டன்பட்டி இணைப்பு, கோட்டாநத்தம்-முத்தழகுபட்டி, வடுகம்பாடி-காளப்பட்டி, டி.கே. சாலை-நேருஜி காலணி வரை தார் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஊராட்சி, பாடியூர் ஒன்றியம் கூட்டாத்துபட்டி-மோளப்பாடியூர், சுக்காம்பட்டி ஊராட்சி, புதுப் பட்டி-பூசாரிப்பட்டி, கொம்பேறிபட்டி ஊராட்சி, ஜங்கால்பட்டி-மலைப்பட்டி, மோர்பட்டி ஊராட்சி கோப்பம்பட்டி, கொம்பேறிபட்டி-மம் மாமனியூர் வரை தார் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், பாடியூர் ஊராட்சி மேற்கு தெருவில் 30,000 லிட்டர் கொள்ளளவு மேல் நிலைத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

**இணைப்புச் சாலை மேம்படுத்தல்!**

வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, அய்யலூர் புத்தூர் சாலை-காக்காயனூர் இணைப்பு சாலைகளை மேம்படுத்த நில கையகப்படுத்துதல் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், கொசவபட்டி-எட்டுகுளத்துப்பட்டி, வேடசந்தூர் ஒன்றியம், பெருமாள்கோயில்பட்டி-பிடாரி அம்மன் கோயில், இராமநாதபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி-பெருமாள்கோயில் பட்டி, குளத்தூர் ஊராட்சி சுந்தரபுரி-அரசம்பட்டி வரை தார் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, குடகனாற்றில் வேடசந்தூர் பேரூராட்சி, பகுதியில் ஆற்றில் இருபுறமும் 1 கிலோ மீட்டர் தூரம் வரை தடுப்புச் சுவர், காக்காதோப்பு-கருக்காம்பட்டி வரை உள்ள இரு வழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் பேரூராட்சி, ஒட்டன்சத்திரம்-வடமதுரை சாலை 300 மீட்டர் மட்டும் நில கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தி நான்கு வழிச்சாலையாக மாற்றி அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஊராட்சி ஒன்றியம் தனி தாலுகாவாக அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் பேரூராட்சி, வெங்கடாசலம் செட்டியார் தெரு (வார்டு 4), இந்திரா நகர் மெயின் தெரு (வார்டு 5), நாடார் தெரு 1 (வார்டு 6), சித்தநாத தேவர் தெரு (வார்டு 6), அப்பாவு செட்டியார் தெரு (வார்டு 6), கொண்டி சீனிராவுத்தர் தெரு (வார்டு 7), சாலைத்தெருகிழக்கு தெரு 4,5 (வார்டு 9), இராஜகோபாலபுரம் மேற்கு 3, 12 (வார்டு 11), முகமது உசேன் ராவுத்தர் தெரு (வார்டு 15)-ல் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் பேரூராட்சி, மேற்கு தெரு 2, 3 (வார்டு 9), நேருஜி நகர் வடக்கு தெரு 5,7,9 (வார்டு 10)-ல் தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் பேரூராட்சி, நேருஜிநகர் மெயின் தெரு (வார்டு எண்-10) நாகம்மாள் கோவில் முதல் சாலைத்தெரு (வார்டு எண்-9) மற்றும் சாலைத்தெரு முதல் நெடுஞ்சாலைத் துறை அலுவலகம் (வார்டு எண்-6) சிறுபாலத்துடன் கூடிய வடிகால் அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் பேரூராட்சி, 1-வது வார்டு இந்திரா நகர், மைனர்காலனி, 2-வது வார்டு சந்தைப்பேட்டை தெரு ஆகிய இடங்களில் மேல்நிலைத் தொட்டி கட்டி தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் பேரூராட்சி, வடமதுரை ரோட்டில் அமைந்துள்ள பேருந்துநிலையத்தில் வணிக வளாக கடைகள் கட்டித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் பேரூராட்சி, 9-வது வார்டு நேருஜிநகரில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்தில் பழுது பணிகள் மேற்கொள்ளவும் முதல் தளத்தில் உணவு அருந்தும் கூடம் கட்டித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் பேரூராட்சி, சர்வே எண்-1973/3-ல் புதிய நவீன ஆடு அடிக்கும் கூடம், அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 12 வகுப்பறைகள் புதிதாக கட்டித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் பேரூராட்சி, 9-வது வார்டு சாலைத் தெரு, 11-வது வார்டு இராஜகோபாலபுரம், 5-வது வார்டு இந்திரா நகரில், 7-வது வார்டில், 13-வது வார்டு அண்ணா நகர், 14-வது வார்டு மைனர் காலனி, 2-வது வார்டு, சந்தைப் பேட்டை, 3-வது வார்டு, பாரதிநகர் ஆகிய இடங்களில் புதிதாக அங்கன்வாடி கட்டடங்களைக் கட்டித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பொதுப் பணித் துறைக்கு சொந்தமான நங்காஞ்சியாறு வடிகால் கோட்டம், குடகனாறு உப கோட்டம், விருந்தினர் விடுதி கட்ட வேண்டும்.

**பேவர் பிளாக் சாலை**

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 1-வது வார்டு காக்காரன்பட்டி மதுக்கரை, 2-வது வார்டு கோவில்பட்டி, நடுத்தெரு காளியம்மன் கோவில்- அழகர் வீடு வரை பேவர் பிளாக் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 2-வது வார்டு முத்தம்பட்டியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலைத் தொட்டி, 3-வது வார்டு பாளையம் சந்தை திடலில் வணிக வளாகம் கட்டடம் கட்டுவதற்கு (34 கடைகள்) மற்றும் சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 3-வது வார்டு பாளையம், சந்தை பேட்டை எதிரில் விநாயகர் கோவில் பின்புறம் பேவர்பிளாக் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 3-வது வார்டு பாளையம், திருச்சி ரோட்டில் அங்கன்வாடி கட்டடம் கட்டித் தர வேண்டும்.

வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, பாளையம் பேரூராட்சி, 3-வது வார்டு பாளையம், கால்நடை மருத்துவமனை, 4-வது வார்டு பாளையத்திற்கு தெற்கே பாலத்திற்கு கீழ்புறம் சலவை தொழிலாளர்களுக்கு சலவை கூடம் கட்டித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 5-வது வார்டு பாளையம், சானிப்பட்டி மயானம்-அயினாகவுண்டனூர் லட்சுமணன் வீடு வரை தார் சாலை, ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் (200மீ) அமைத்துத் தர வேண்டும். 6-வது வார்டு, பாளையம், சிலும்பாகவுண்டனூர் பள்ளிக் கூடம்- கருப்பசாமி வீடு வரை பேவர் பிளாக் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 6-வது வார்டு, பாளையம், சிலும்பாகவுண்டனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவ மாணவியருக்கு கழிப்பறை கட்டித் தர வேண்டும்.

வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, பாளையம் பேரூராட்சி, 7-வது வார்டு எண், திண்டுக்கல் கரூர் மெயின்ரோடு பழைய பேரூராட்சி அலுவலகம்-ரெட்டியார் களம் மூன்று ரோடு வரை சிறு பாலத்துடன்கூடிய தார் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 7-வது வார்டு, சேவகவுண்டன்புதூர் அங்கன்வாடி மையம் கட்டித் தர வேண்டும்.

வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, பாளையம் பேரூராட்சி, 8-வது வார்டு, பஸ் நிலையம் எதிர்புறம் கம்பன் பள்ளி சந்து கால்வாய் வசதி அமைத்துத் தர வேண்டும்.

**நாடக மேடை!**

வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, பாளையம் பேரூராட்சி, 8-வது வார்டு, அனியாப்பூரில் அங்கன்வாடி மையம், நாடக மேடை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, பாளையம் பேரூராட்சி, 9-வது வார்டு, வீரக்கவுண்டன்பட்டியிலுள்ள மயானத்திற்கு சுற்றுச்சுவர் எரிமேடை சுமார் 200 மீ அளவிற்கு கூட்டக்காரன்பட்டியில், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி கட்டித் தர வேண்டும். கூட்டக்காரன்பட்டியில் முற்றிலும் சேதமடைந்த சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றித் தர வேண்டும். சலவைத் தொழிலாளர்களுக்கு தனியாக ஆழ்குழாய் மற்றும் சலவை தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, பாளையம் பேரூராட்சி, 10-வது வார்டு, விராலிபட்டி தார்சாலை-9-வது வார்டு கூட்டடக்காரன்பட்டி காலணி சித்திரப்பள்ளி தார்சாலை வரை சுமார் 1கி.மீ. தார்சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 11-வது வார்டு, மணவை ரோடு தென்புறம் PVS வீடு பின்புறம் சந்தில் பேவர் பிளாக் சாலை அமைத்துத் தர வேண்டும்.

**நியாயவிலைக் கடைக்கு கட்டிடம்!**

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 11-வது வார்டு மற்றும் 12-வது வார்டுக்கு வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் நியாய விலை கடைக்கு புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 12-வது வார்டு, நாட்டாமை வீடு- அம்பலக்கல் வழியாக கறிகடை பழனிச்சாமி வீடு வரை பேவர் பிளாக் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 13-வது வார்டு, பேருந்து நிலையத்தின் வடபுறம் 20 வணிகவளாக, குஜிலியம்பாறையில் அங்கன்வாடி மையம் கடைகள் கட்டித் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 13-வது வார்டு, கரூர் திண்டுக்கல் மெயின் ரோடு-கதிரவன் வீடு வழியாக மேற்கே ஆற்றோடை வரை பெரிய கால்வாயுடன் தார் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 13-வது வார்டு, சூலப்புரம் சாலையில் ராஜா வீடு-கிழக்கு மயில்சாமி வீடு வரை வடிகால் அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 14-வது வார்டு, கொல்லப்பட்டி புதுப்பாலம்-உரும்பிக்கார தெரு வரை தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 14-வது வார்டு, கொல்லப்பட்டி, பரவசிவம் வீடு-தார்சாலை வரை, பழனிச்சாமி வீடு-ரமேஷ் வீடு வரை மற்றும் பழனிச்சாமி வீடு-சின்டெக்ஸ் டேங்க் வரை பேவர் பிளாக் வரை சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 14-வது வார்டு, பொம்மாநாயக்கன்பட்டியில் தார் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, பாளையம் பேரூராட்சி, 15-வது வார்டு, கிருஷ்ணசாமி ஆசாரி வீடு-தெற்கு ஆறுமுகம் வீடு வரை பேவர்பிளாக்கு சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, பாளையம் பேரூராட்சி, 15-வது வார்டு, சேதுராமன் வீட்டிற்கு எதிர்புறம் தெற்கே சென்று மேற்கே செல்வம் வீடு வரை கால்வாயுடன் பேவர்பிளாக் சாலை அமைத்துத் தர வேண்டும்.

**மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி!**

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 15-வது வார்டு, இராமகிரி ஆர்.சி காலணியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, திண்டுக்கல் கரூர் சாலை-சாணிபட்டி வரை தார்சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, பாளையம் பேரூராட்சி, 9-வார்டு சேகர் களம் தார் சாலை அமைத்துத் தர வேண்டும்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் தாலுகா மருத்துவமனையில் 60 படுக்கைகள் வசதி கொண்ட கட்டடம் கட்டி அதற்குண்டான கழிப்பிட வசதி, படுக்கை வசதி மற்றும் CT ஸ்கேன் வசதிகளுடன் அமைத்துத் தர வேண்டும்.

பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன். திண்டுக்கல், தேனி, மதுரை மாவட்டங்களில் காட்டுநாயக்கர் என்ற ஒரு சமூகத்தினர் வாழ்கிறார்கள். அந்த காட்டுநாயக்கர் சாதியில் பிறந்த அப்பாவிற்கு சாதிச் சான்றிதழ் இருக்கிறது. ஆனால் மகனுக்கு அந்தச் சான்றிதழ் இல்லை. அவ்வாறு சான்றிதழ் இல்லாததால் பள்ளிக்குச் செல்ல இயலாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். கோயில்பட்டியில் இருக்கிறது என்கிறார்கள்; காட்டுநாயக்கர் என்கிற சாதியினருக்கு சான்றிதழ் வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்ற பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு த.சாமிநாதன் பேசினார்.